முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 647**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.07.2021, புதன்கிழமை

1. ஞான பரபிரம்மமே அரங்கா போற்றி
ஞானிகள் படைகொண்ட தேசிகா போற்றி
தானதர்ம பலம்கொண்டே கலியினில்
தரணிமாற்றம் செய்யவந்த வள்ளலே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்மிக்க தொண்டர் படை கொண்ட
அரங்கனே கலியுகத்தை மாற்றவல்ல ஞானி
3. ஞானியரின் மாதர்ம பலமே
நம்பிக்கை தரும் கலியுகத்தின் சிறந்த மார்க்கமாகும்
தானதர்ம சக்திவழி இணைந்த
தன்னார்வ தொண்டர்கள் மூலமாகத்தான் அரங்கன் நோக்கம்
4. நோக்கமதும் ஞானஆட்சி காலமாக
நிலமதனில் வெற்றிநிலை காணக்கூடும்
தேக்கமின்றி அரங்கனுள் யானிருந்து
தெய்வபலம் மக்களுக்கு தந்தருள
5. அருளுகின்ற இந்த உண்மை மார்க்கத்தை
அண்டிவரும் மக்கள்கள் மூலமாகவே
இருள் என்கின்ற உலகமாயைகளை எல்லாம் நீக்கி
இணையில்லாத அழியாமை என்கிற மகாசக்தியை
6. சக்தியை மக்களுக்கு வழங்கி
சடாட்சரன் யானும் பரிபூரணமாய்
யுக்திபட உலகமாற்றம் செய்து
உயர்ஞானி அரங்கன்வழி பேரற்புதம் புரிவேன்
7. அற்புதம் தருகின்ற ஞானமார்க்கம்
அரங்கன் வகுத்த சன்மார்க்கமாகும்
ஏற்புகொண்டால் கலியின் துன்பங்களோடும்
இணைந்து அரங்கன் தர்மத்தில் கலந்தால்
8. கலந்தால் கர்மவினை அகன்றோடும்
கலந்துமே ஞானிகள் நாமஜெபம் செய்தால்
பலமான ஆயுள் கீர்த்தி கண்டு
பரிபூரணம்பட மரணமில்லாத பெருவாழ்வும் உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–